செய்தி வெளியீடு எண். 92 நாள்: 09.02.2018

**<u>நலவாரியங்களில் பதிவு செய்யாத தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்து கொள்ள சிறப்பு முகாம் 16.02.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>**

தொழிலாளர் துறை சார்பாக தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலவாரியம் இதர 15 நலவாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் தங்களின் பதிவு விவரங்களுடன் ஆதார் எண்ணினை இணைத்திடவும், இது நாள் வரை நலவாரியங்களில் பதிவு செய்யாத தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்து கொள்ளவும், சிறப்பு முகாமானது 16.02.2018 அன்று காலை 10.30 மணிக்கு அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

அச்சிறப்பு முகாமில் நலவாரியங்களில் பதிவு செய்து கொள்ள வருபவர்கள் உரிய படிவத்தினை பூர்த்தி செய்து உடன் குடும்ப அட்டை (அசல் மற்றும் நகல்), ஆதார் அட்டை (அசல் மற்றும் நகல்), வங்கிப்புத்தக நகல் மற்றும் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றினையும், ஆதார் எண்ணினை பதிவு விவரங்களுடன் இணைக்க வருபவர்கள் தங்களது நலவாரிய அடையாள அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல் ஆகியவற்றினையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், சிறப்பு முகாமில் ஆதார் எண் இணைக்க இயலாதவர்கள் அலுவலக வேலை நாட்களில் திருவள்ளூர் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தை அணுகி தங்கள் பதிவு விவரங்களுடன் ஆதார் எண்ணினை இணைத்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**